பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல31/2019

எனது இலக்கம் : CS/SLAS/AMEN/MINUT பாகம் (IV)
பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும்
கால்நடை அபிவிருத்தி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.
2019 ஒக்டோபர் மாதம் 04 ஆந் திகதி

அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
மாவட்ட செயலாளர்கள்,ூ
பிரதேச செயலாளர்கள்

**இலங்கை நிருவாக சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பில் 2019.08.19 ஆந் திகதிய 2137/5 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் உள்ளடக்கப்பப்பட்ட திருத்தங்களை நடைமுறைப்படுத்துதல்**

இலங்கை நிர்வாக சேவையின் தரம் மூன்றிலிருந்து (III) தரம் இரண்டிற்கும் (II) தரம் இரண்டிலிருந்து (II) தரம் ஒன்றிற்கும் (I) தரமுயர்வு வழங்குவதற்கான ஆகக் குறைந்த சேவைக் காலத்தை திருத்துவதுடன் தொடர்புடைய ஏற்பாடுகளை உள்ளடக்கிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2019 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய 2137/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை நிருவாக சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் ஆறாவது பிரிவிற்கான திருத்தத்திற்கு இணங்க தற்போது சேவையிலுள்ள இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர்களுக்கான தரமுயர்வு வழங்கல் பின்வருமாறு மேற்கொள்ளப்படும்.

**01.** மூன்றாம் (III) தரத்திலிருந்து இரண்டாம் (II) தரத்திற்கு தரமுயர்த்துதல்.

**1.1)** 2019 பெப்ரவரி 26 ஆந் திகதிக்கு முன்னர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் திருத்தப்பட்டவாறான இலங்கை நிர்வாக சேவைப் பிரமாணக் குறிப்பின் 13.1.1. (அ) இன் vii ஆம் இலக்கத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால நடாத்தப்படும் திறன் விருத்தி III ஆம் மட்டப் பாடநெறியை பூர்த்தி செய்ய வேண்டிய தேவைப்பாட்டைத் தவிர 13.1.1. (அ) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்த திகதி அல்லது 2019 பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதி ஆகிய இரண்டு திகதிகளில் பிந்திய திகதியிலிருந்து II ஆம் தரத்திற்கு தரமுயர்த்தப்படுவர்.

**1.2)** திருத்தப்பட்டவாறான இலங்கை நிர்வாக சேவைப் பிரமாணக் குறிப்பின் 13.1.1. (அ) இன் தொடர் இலக்கம் V இன் கீழ் குறிப்பிட்டுள்ள மற்றைய அரச கருமமொழித் தேர்ச்சியை 01/2014 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கைக்கும் அதன் நேர் எதிர் விளைவான சுற்றறிக்கைகளுக்கும் இணங்க வழங்கப்பட்டுள்ள சலுகைக் காலங்களில் பூர்த்தி செய்யும் உத்தியோகத்தர்கள் உரிய தினத்தில் மற்றைய அரசகரும மொழித் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களாகக் கருதப்படுவர்.

**1.3)** திருத்தப்பட்டவாறான இலங்கை நிர்வாக சேவைப் பிரமாணக் குறிப்பின் 13.1.1. (அ) இன் தொடர் இலக்கம் V இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சியை 01/2014 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் அதன் நேரெதிர் விளைவான சுற்றறிக்கைகள் மூலம் வழங்கப்பட்டுள்ள சலுகைக் காலத்தினுள் பூர்த்தி செய்யாத உத்தியோகத்தர்கள் மற்றைய அரசகரும மொழித் தேசர்ச்சி உள்ளிட்ட இந்தச் சுற்றறிக்கையின் 1.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தகைமைகளையும் பூரத்தி செய்யும் தினத்திலிருந்து தரம் II இற்கு தரமுயர்த்தப்படுவர்.

**02.** இரண்டாம் (II) தரத்திலிருந்து முதலாம் (I) தரத்திற்கு தரமுயர்த்துதல்.

2.1) சேவைப் பிரமாணக் குறிப்பின் திருத்தம் நடைமுறைக்கு வரும் 2019 பெப்ரவரி 26 ஆந் திகதியில் தரம் II இல் உள்ள உத்தியோகத்தர்களுக்கும் தரம் III இல் ஆறு (06) வருடங்களுக்கு மேற்பட்ட செயலலூக்கமிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள்

**(அ).** தரம் II இலிருந்து தரம் I இற்கு தரமுயர்வு பெறுவதற்குப் பெற்றிருக்க வேண்டிய 13.2 (அ) இன் தொடர் இலக்கம் i இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முதுமானிப் பட்டத் தகைமையைப் பூர்த்தி செய்வதற்காக இச்சுற்றறிக்கை வெளியிடப்படும் திகதியிலிருந்து ஐந்து (05) வருட சலுகைக்காலம் வழங்கப்படுவதுடன் அந்தச் சலுகைக் காலத்தினுள் முதுமானிப் பட்டத் தகைமையைப் பூர்த்தி செய்யும் உத்தியோகத்தர்கள் இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க 13.2 (அ) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய தகைமைகளைப் பூர்த்தி செய்த தினத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தரம் I இற்கு தரமுயர்த்தப்படுவர்.

**(ஆ) தரம் II இலிருந்து தரம் I இற்கு தரமுயர்வு பெறுவதற்குப் பெற்றிருக்க வேண்டிய 13.2 (அ) இன் தொடர் இலக்கம் V இன் கீழான இரண்டாம் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையைப் பூர்த்தி செய்வதற்கு தரம் II இற்குத் தரமுயர்வு பெற்ற திகதியிலிருந்து மூன்று (03) வருட சலுகைக் காலமொன்று வழங்கப்படுவதுடன் அச்சலுகைக் காலப் பகுதியில் உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்யும் உத்தியோகத்தர்கள் இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க 13.2 (அ) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய தகைமைகளைப் பூர்த்தி செய்த திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தரம் I இற்கு தரமுயர்த்தபடுவர்.**

2.2) சேவைப் பிரமாணக் குறிப்பிற்கான ஆறாவது திருத்தம் நடைமுறைக்கு வரும் 2019 பெப்ரவரி 26 ஆந் திகதியில் தரம் II இல் உள்ள உத்தியோகத்தர்களை தரம் I இற்கு தரமுயர்த்தும் போது 13.2(அ) இன் ii மற்றும் iv இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்குப் பதிலாக பின்வரும் தகைமைகள் கவனத்திற் கொள்ளப்படும்.

**அ)** தரம் II இல் இரண்டு (02) வருட செயலூக்க மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தலும் தரம் II இற்குத் தரமுயர்வு பெற்றதன் பின்னர் இரண்டு (02) சம்பள ஏற்றங்களை உழைத்திருத்தலும்.

**ஆ)** அனுமதியளிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறைக்கு இணங்க தரம் II இற்குத் தரமுயர்வு பெற்றதன் பின்னர் தரமுயர்வு வழங்கும் தினத்துக்கு முன்னரான இரண்டு (02) வருட காலத்தில் திருப்திகரமான அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்திலான செயலாற்றுகையை வெளிப்படுத்தியிருத்தல்.

2.3) சேவைப் பிரமாணக் குறிப்பின் திருத்தம் நடைமுறைக்கு வரும் 2019 பெப்ரவரி 26 ஆந் திகதியில் தரம் III இல் ஆறு (06) வருடங்களுக்கு மேற்பட்ட செயலலூக்கமிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள இச்சுற்றறிக்கையின 1.1. இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க தரம் II இற்கு தரமுயர்த்தப்படும் உத்தியோகத்தர்களை தரம் I இற்குத் தரமுயர்த்தும் போது 13.2(அ) இன் ii மற்றும் iv இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்குப் பதிலாக பின்வரும் தகைமைகள் கவனத்திற் கொள்ளப்படும்.

**அ)** தரம் III மற்றும் II இல் பன்னிரண்டு (12) வருடங்கள் செயலூக்கமிக்கதும் திருப்திகரமானதுமான சேவை காலத்தையும் பூர்த்தி செய்திருத்தலும் பதினொரு (11) சம்பள ஏற்றங்களை உழைத்திருத்தலும்.

**ஆ)** அனுமதியளிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறைக்கு இணங்க தரமுயர்வு வழங்கும் தினத்துக்கு முன்னரான பன்னிரண்டு (12) வருட காலத்தில் திருப்திகரமான அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்திலான செயலாற்றுகையை வெளிப்படுத்தியிருத்தல்.

<u>குறிப்பு:</u>

2019 பெப்ரவரி 26 ஆந் திகதிக்கு முன்னர் இலங்கை நிருவாக சேவையின் தரம் III இல் ஆறு (06) வருடங்களுக்கு மேற்பட்ட செயலூக்கமிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள, இந்தச் சுற்றறிக்கையின் 1.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க தரம் II இற்கு தரமுயர்த்தப்பட்ட உத்தியோகத்தர்களை தரம் I இற்குத் தரமுயர்த்து போது அவ் உத்தியோகத்தர்கள் மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சியைப் பூர்த்தி செய்வதற்கு எடுத்த மேலதிக காலத்திற்குச் சமனான காலப்பகுதியினால் அந்த உத்தியோகத்தர்களை தரம் I இற்குத் தரமுயர்த்து தாமதிக்கப்படும்.

2.4) 2019 பெப்ரவரி மாதம் 26 ஆந் திகதிக்கு முன்னர் சேவையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள இச்சுற்றறிக்கையின் தொடர் இலக்கம் i இன் கிழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க தரம் II இற்கு தரமுயர்வு வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களை தரம் I இற்கு தரமுயர்த்துவதற்கு முன்னர் திருத்தப்பட்டவாறான இலங்கை நிர்வாக சேவைப் பிரமாணக் குறிப்பின் 13.1.1. (அ) இன் vii ஆம் இலக்கத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் நடாத்தப்படும் திறன் விருத்தி III ஆம் மட்டப் பாடநெறியை பூர்த்தி செய்து சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

2.5) 2019 பெப்ரவரி மாதம் 26 ஆந் திகதிக்கு முன்னர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்களை தரம் I இற்கு தரமுயர்த்தும் போது 13.2(அ) இல் தொடர் இலக்கம் vi இன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் நடாத்தப்படுகின்ற திறன் விருத்தி மட்டம் - II பாடநெறியை வெற்றிகரமாகப் பூரத்தி செய்து சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும் என்ற தேவையானது கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

2.6) II ஆம் தரத்திலிருந்து தரம் I இற்கு தரமுயர்வு பெறுவதற்குப் பெற்றிருக்க வேண்டிய, திருத்தப்பட்டவாறான இலங்கை நிர்வாக சேவைப் பிரமாணக் குறிப்பின் 13.2 (அ) இன் தொடர் இலக்கம் V இன் கீழான இரண்டாம் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையை 10/2015 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் அதன் நேர் எதிர்விளைவான சுற்றறிக்கைகள் மூலம் வழங்கப்பட்டுள்ள சலுகைக் காலங்களினுள் பூர்த்தி செய்யும் உத்தியோகத்தர்கள் உரிய தினத்தில் இரண்டாம் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையைப் பூர்த்தி செய்தவர்களாகக் கருதப்படுவர்.

இச்சுற்றறிக்கை அரசசேவை ஆணைக்குழுவின் அனுமதியின் கீழ் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்./ஜே.ஜே. ரத்னசிரி

செயலாளர்

பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சு